செய்தி வெளியீடு எண். 181 நாள்: 17.04.2020

**கொரேனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளால், 50-க்கும் மேற்ப்பட்ட இருளர் இன குடும்பங்களுக்கு அரிசி, கோதுமை உள்ளிட்ட 14 வகையான மளிகை பொருட்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், அத்திமாஞ்சேரிபேட்டை மற்றும் கர்லம்பாக்கம் ஊராட்சிகளில் கொரேனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளால், 50-க்கும் மேற்ப்பட்ட இருளர் இன குடும்பங்களுக்கு அரிசி, கோதுமை உள்ளிட்ட 14 வகையான மளிகை பொருட்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.04.2020) வழங்கி செய்தியாளர்களிடம் கூறியதாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கொரோனா வைரஸ் தொற்று கண்காணிக்க மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புடன் முழுமையாக நடைபெற்ற வருகிறது. 144 தடைச் சட்டம் ஏப்ரல் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால் அரிசி, பருப்பு, காய்கறிகள் உள்ளிட்ட அனைத்து அத்தியவசியமான உணவு பொருட்கள் பொது மக்களுக்கு கிடைப்பதற்க்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மாவட்டதிலுள்ள மொத்தம் உள்ள நியாய விலைக் கடைகளில் நிவாரண நிதி மற்றும அத்தியவசியப் பொருட்கள் வழங்கிட மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நடவடிக்கைள் எடுக்கப்பட்டு 97 சதவிகிதம் நிறைவடைந்தது.

41 நபர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. 16 தனிமைப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு பகுதிகள், 5 கி.மீ சுற்றளவு கொண்ட பகுதி கட்டுப்பாட்டு பகுதியாக எடுத்து கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 2400 குடும்பங்கள் 28 நாட்கள் முடிவடைந்து தனிமைப்படுத்தப்படுதலில் இருந்து முற்றிலுமாக வெளி வந்துள்ளனர், மேலும் 1200 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்படுதலுக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளனர். இப்பகுதிகளில் பொது மக்கள் வெளியில் வருவதை முற்றிலுமாக தவிர்க்கும் பொருட்டு, மாவட்ட நிர்வாகத்துடன் தன்னார்வாலர்கள் இணைந்து உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை உழைக்கும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

விவசாய பெருங்குடி மக்கள் வாயிலாக பழங்கள், காய்கறிகள் உள்ளிட்ட உணவு பொருட்கள் மக்களுக்கு தங்கு தடையின்றி கிடைக்க ஏதுவாக உற்பத்தி திறனை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 4000 மெ.டன் அளவிலான தர்பூசனி பழங்கள் அறுவடைக்கு தயாராக உள்ளது. உழவர்கள் மற்றும் வியாபாரிகளை ஒருங்கிணைத்து மக்களுக்கு நேரடியாக பழங்கள் மற்றும் காய்கறிகளை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில், நேற்று வரை 71 மெ.டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று, உழவர் சந்தைகளிலும் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் வாயிலாக தனி மனித இடைவெளி பின்பற்றப்பட்டு தர்பூசனி, அரிசி மற்றும் காய்கறிகள் கொண்ட தொகுப்புகள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தனியார் தொழிற் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் சென்றடையும் வகையில் இத்தொகுப்புகளானது, வேளாண்மைத்துறை சார்பாக தனியார் தொழிற் நிறுவனங்களுக்கு நியாமான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாய பெருமக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இது போன்ற நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று வரை 10 நெல் கெள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் எண்ணெய் மற்றும் அரிசி ஆலைகள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று (17.04.2020) வழங்கி செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்ச்சியினில் திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சொ்ணம் அமுதா, பள்ளிப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**